# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE, KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 171-2024 (/2017) |
| Deposition of witness for | Prosecution : LW 16 - PW 5 |
| | Defence : |
| | Court : |
| Name : தமிழரசு | Father's Name: அண்ணாமலை |
| | Husband Name: |
| Village/Town : திருவண்ணாமலை | Taluk : |
| | Calling : உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| | Age : 61 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29.01.2026

**எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

**முதல் விசாரணை :**

நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது திருவண்ணாமலையில் வசித்து வருகிறேன். கடந்த 06.08.2017ம் தேதி கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது 16.00 மணியளவில் திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ரங்கநாதன் வயது-60 த/பெ. குப்புசாமி, என்பவர் வாகன விபத்தில் பலத்த காயமடைந்து சுயநினைவின்றி இருந்ததால் அங்கிருந்த அவருடைய மகன் அண்ணாமலை வயது-38, த/பெ. ரங்கநாதன் என்பவரிடம் விபத்து சம்மந்தமாக புகார் வாக்குமூலம் பெற்றேன். பின்னர் நிலையம் சேர்ந்து 18.00 மணியளவில் மேற்படி

புகார் மனுவினை பரிசீலனை செய்து நிலைய குற்ற எண். 367/2017, ச/பி. 279, 337 இ.த.ச.வின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும். பின்னர் மறுநாள் காலை 07.00 மணிக்கு சம்பவயிடமான திருவண்ணாமலை – திண்டிவனம் மெயின்ரோடு மலப்பாம்பாடி கூட்டு ரோடு அருகில் எழில் நகர் பாலத்திடம் சென்று சாட்சிகள் பழனிவேல், ஆனந்தன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, மாதிரிவரைபடம் வரைந்து பார்வைமகசர் தயார் செய்தேன். நான் தயார் செய்த மாதிரிவரைபடம் மற்றும் பார்வை மகசர் முறையே **அ.சா.ஆ.4** மற்றும் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் புகார்தாரர் அண்ணாமலை, சம்பவ சாட்சிகளான லட்சுமி, காசி, ராம்கி, சிவராஜ் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான பழனிவேல் மற்றும் ஆனந்தன் ஆகியோரை தனித்தனியா விசாரணை செய்து வாக்கமூலம் பதிவுசெய்தேன். பின்னர் சம்பவயிடசாட்சிகளின் விசாரணையின் மூலம் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவரவே இவ்வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் வழக்கின் எதிரி ராஜீவ்குமார், வயது–30, த/பெ. ரகோத்தமன் என்பவரை அன்று மாலை 16.30 மணிக்கு கைது செய்து தக்க இருநபர் பிணையம் பெற்று நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 25 BB 0004 ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தை விபத்தின் காரணம் அறியும்பொருட்டு மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தினேன். பின்னர் 12.08.2017ம் தேதி விபத்தில் காயம்பட்ட ரங்கநாதன் திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து சிகிச்சை முடித்து வீட்டிற்கு வந்து 26.08.2017ம் தேதி மாலை 03.00 மணியளவில் வீட்டில் இறந்துவிட்டதாக வாதியான அண்ணாமலை நிலையம்வந்து வாகனவிபத்து காரணமாக இறந்துவிட்டதாக கொடுத்த தகவலின் பேரில் இறந்தவரின் வீட்டிற்கு சென்று பிரேதத்தை கைப்பற்றி திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்

ஒப்படைத்து பின்னர் நிலையம் சேர்ந்தேன். மறுநாள் 27.08.2017ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இ.த.ச.வில் இருந்து ச/பி. 279, 304(A) இ.த.ச.வாக சட்டப்பிரிவு மாற்றம் செய்துதேன். அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ. 6** ஆகும். பின்னர் அன்றைய தினமே காலை 10.30 மணிக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கிடம் இருந்த விபத்தில் இறந்துபோன ரங்கநாதன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேதவிசாரணை மேற்கொண்டேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும். பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான ராஜ்கண்ணு, விஜய், முனுசாமி, பொன்னுசாமி, சக்கரபாணி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் ரங்கநாதன் என்பவரின் இறப்பின் காரணம் அறியும்பொருட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக தலைமைக் காவலர் 321 செல்வம் என்பவரிடம் ஒப்படைத்து பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினேன். பின்னர் விபத்தில் காயம்பட்ட ரங்கநாதன் என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர். திரு. நாகராஜன் என்பவரை விசாரணை செய்து விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன். அந்த விபத்துப்பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.8** ஆகும். இத்துடன் என்னுடைய புலன்விசாரணையை முடித்து பின்னர் மேல் விசாரணைக்காக இவ்வழக்கை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்குவிசாரணை**

அ.சா.1 அவரது புகார் மனுவிலேயே இறந்த ரங்கநாதன் சம்பவ காலத்தில் இருந்து 5 வருடங்களுக்கு முன்பாகவே காது கேளாநிலையிலும், உடல் நோய்வாய்ப்பட்டு பலவீனமாக இருந்தார் என்றும், வீட்டிலேயே படுத்தப்படுக்கையாக இருப்பார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

மேற்படி இறந்த ரங்கநாதன் திருவண்ணாமலை பள்ளித்தெருவில்தான் வசித்தார் என்றால் சரிதான். மேற்படி இறந்த ரங்கநாதன் மேற்படி சம்பவயிடம் வருவதற்கான எந்த சூழ்நிலையும் இல்லை என்றால் சரிதான். அவர் மனம் போன போக்கில் கால்போன போக்கில் எங்கேயாவது சென்றுவிடுவார் என்றால் சரிதான். புகார் மனுவில் சம்பவத்தை யார் பார்த்து அ.சா.1னிடம் சொன்னதாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடம் சென்று பார்த்தபோது விபத்துக்குள்ளனா வாகனம் ஏதேனும் இருந்ததா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் எழில் நகருக்கும் SKP கல்லூரிக்கும் சுமார் 1 கிலோமீட்டர் இருக்கும் என்றால் ½ கிலோமீட்டர்தான் இருக்கும். அ.சா.1னின் புகாரில் SKP கல்லூரிக்கு அருகில் விபத்து நடந்ததாக ஏதும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி இறந்த ரங்கநாதன் 06.08.2017ம் தேதியன்று விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்ந்து 12.08.2017ம் தேதி சிகிச்சையில் இருந்து பின்னர் சிகிச்சையில் இருந்து வெளியேறி 26.08.2017ம் தேதி வீட்டில் இருந்தபோது இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி 12.08.2017ம் தேதி முதல் 26.08.2017 ஆகிய காலங்களில் எந்த விதமான சிகிச்சை பெற்றக்கொண்டார் என்று எனக்கு ஏதேனும் விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் ரங்கநானுக்கு எலும்பு சம்மந்தமாக அடிக்கடி திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று வந்ததாக புகார்தாரர் கூடுதல் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார். மேற்சொன்னவாறு எலும்பு சம்மந்தமாக சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான எந்த மருத்துவ ஆவணத்தையும் என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி எனது விசாரணையில் அவர் எலும்பு சம்மந்தமாக ரங்கநாதன் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக என்னிடம் எந்தவித வாக்குமூலமும் அளிக்கவில்லை நான் தவறுதலாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், விபத்தில்

இறந்துபோன ரங்கநாதன் மனநலம் பாதிக்கப்பட்டதால் ஏதோ ஒரு வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டதால் நஷ்ட ஈடு பெறுவதற்காக எதிரியின் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக கொடுத்த பொய்யான புகார்மனுவை சரிவர விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன் என்றாலும், சம்பவயிடம் செல்லாமலும் சாட்சிகளை விசாரணை செய்யாமலும் அனைத்து ஆவணங்களையும் காவல்நிலையத்திலேயே வைத்து தயார் செய்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய எழுத்துமூலமான வாக்குமூலம் எதுவும் இவ்வழக்கின் காவல் ஆய்வாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/-M.C.Arun
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்